இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 10 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 04 – புதன்கிழமை 20 ஆகஸ்ட் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:84 - Issue 10: Thiruvalluvar Year - 2056 - Aavani 04 - Wednesday 20 August 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## விடியல் பயணத் திட்டம்

# மகளிர் முன்னேற்றத்திற்கான முதலீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக. 20 -**

**“விடியல் பயணத் திட்டத்துக்கு அரசு செலவழிப்பது என்பது மகளிர் முன்னேற்றத்துக்கான முதலீடு” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**



தமிழக முதல்வராக மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கையெழுத்திட்ட 5 திட்டங்களில் ஒன்றான, சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் மகளிருக்கு இலவசப் பயண திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 51 மாதங்கள் நிறைவு பெற்றுள்ளது.

பல்வேறு விமர்சனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் மகளிரின் ஏகோபித்த ஆதரவுக்கும் இடையே தொடங்கப்பட்ட இந்த திட்டத்தால் பயன்பெற்ற மகளிரின் எண்ணிக்கை கோடிக்கணக்கில் உள்ளது.

★ 2021ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் தேதி தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் தலைமைச் செயலகம் வந்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தி.மு.க. அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதமாகவும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் ஐந்தினைச் செயல்படுத்தும் விதமாகவும் ஐந்து உத்தரவுகளில் கையெழுத்திட்டார்.

அதில் ஒன்றுதான் சாதாரண கட்டணப் பேருந்துகளில் மகளிருக்கு இலவச பயணம் என்பதாகும். மகளிருக்கு நகர கட்டணப் பேருந்துகளில் இலவச பயணம் செய்வதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு மே 7ஆம் தேதியன்றே வெளியிட்டது. தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக் கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பணிபுரியும் மகளிர், உயர் கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் கட்டணமில்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும் பயணம் செய்யலாம் என்று அந்த ஆணையில் கூறப்பட்டிருந்தது.

### மறுநாளே நடைமுறைப்படுத்தப்பட்டது!

★ மகளிருக்கு சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் இலவச பயண திட்டம் மே 7ஆம் தேதி அறிவிக்கப்பட்டு, அன்றைய நாளே அரசாணை வெளியிடப்பட்டு மறுநாளே (மே 8) நடைமுறைக்கு வந்தது. இரவோடு இரவாக பேருந்துகளில் ‘மகளிர் பயணம் செய்ய கட்டணமில்லை” என்ற ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு மிகவேகமாக பயன்பாட்டுக்கு வந்தது இந்த திட்டம்.

மே 8ஆம் தேதி காலை சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் ஏறிய பெண்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். ஏழை எளிய பெண்களுக்கு இந்த திட்டம் பேருதவியாக அமைந்தது. வேலைக்குச் செல்லும் மகளிரால் கொண்டாடப்பட்டது.

★ பெண்களின் இலவச பயணத்தையும் ஒரு ஒழுங்குப்படுத்தி, அதன் தரவுகளை வைத்திருக்க விரும்பிய தமிழக அரசு, தனியாக மகளிருக்கு இலவச பயணம் என்று குறிப்பிட்டு டிக்கெட்டுகளையும் அச்சடித்து வழங்கியது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

★ இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோதே பெண்களுக்கு இலவசமாகப் பயணிக்க அனுமதியளித்தது ஏன்? எனதமிழகஅரசுவிளக்கமளித்திருந்தது.

### யாருக்கெல்லாம் பலன்?

★ உண்மையில், படிக்கும் கல்லூரி மாணவிகள், படிக்க நினைக்கும் மகளிர் சமூக அறிவைப் பெற நினைக்கும் பெண்களுக்கு, வீட்டில் இருந்தபடியே சிறு குறு தொழில் செய்யும் இல்லத்தரசிகளுக்கு இது மிகவும் பயனுள்ள ஒன்று.

★ சுய தொழில் செய்யும் பெண்களுக்கு.

★ வீட்டிலேயே சிறு தொழில் தொடங்கலாம் என்று நினைப்பவர்களுக்கு..

★ நேரம்கிடைக்கும்போது ஏதாவது கற்றுக்கொள்ளலாம் என்று நினைத்து இலவச பயிற்சி வகுப்புகளுக்கு செல்ல திட்டமிடும் பெண்களுக்கு

★ ஆயிரம், இரண்டாயிரம் சம்பளத்துக்கு அரை மணி நேரம் பயணம் செய்து அடுத்தவர் வீட்டில் வேலை செய்யும் பெண்களுக்கு துணிக்கடைகளில், சிறு நிறுவனங்களில், தூய்மைப் பணியாளர்களாக கட்டட வேலையில் சித்தாளாக பணிபுரியும் குறைந்த ஊதியம் வாங்கும் பெண்களுக்கு...

★ சில கி.மீ. தூரம் உள்ள தன் அம்மா வீட்டுக்குச் செல்ல கணவனின் பையை எதிர்பார்க்கும் பெண்களுக்கு. குழந்தைகளை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் தாய்மார்களுக்கு. குழந்தைகளை நாள்தோறும் பள்ளிக்கு அழைத்துச் செல்லும் பெண்களுக்கு.

★ வீட்டில் கணவரின் வருமானம் போதவில்லை, குழந்தைகளுக்கு ஏதாவது வாங்கிக்கொடுக்க உதவும் என யோசித்து வேலைக்குச் செல்ல தயாராகும் பெண்களுக்கு இந்த திட்டம் பேரானந்தம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

★ ஒரு நாட்டின் வளர்ச்சி, ஒரு மாநிலத்தின் வளர்ச்சி என்பது பெண்களின் வளர்ச்சியையும் கொண்டே கணக்கிடப்படுகிறது. பெண்களின் முன்னேற்றத்துக்காக பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்படும் வரிசையில் இதுவும் அதில் ஒன்று என பார்க்கலாம்.

இத்தகைய நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

**“வீட்டவிட்டு வெளிய போயிட்டு வரணும்னாலே 50 ரூபாய் தேவை. நான் வீட்டுலயே இருந்துக்குறேன்” என்ற எண்ணத்தை பொருளாதாரத் தடையைத் தகர்த்து, கல்விக்கான வேலை வாய்ப்புக்கான முன்னேற்றத்துக்கான பயணத்தைச் சாத்தியமாக்கியது விடியல்_பயணம்!**

**நமது** DravidianModel**இன் 51 மாதங்களுக்குள் விடியல் பயணத்தின் மூலம் நமது சகோதரிகள் 50 ஆயிரம் ரூபாய் வரை சேமித்துள்ளதும் அந்தத் திட்டத்துக்கு அரசு செலவழிப்பதும், மகளிர் முன்னேற்றத்துக்கான முதலீடு!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

## கேட்கப்பட்ட கேள்விகளுக்கு

# தலைமைத் தேர்தல் ஆணையம் பதிலளிக்காதது ஏன்?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுக்கடுக்கான கேள்வி!

**சென்னை, ஆக. 20 -**

**‘இந்தியா’ கூட்டணி சார்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தலைமைத் தேர்தல் ஆணையர் பதிலளிக்காதது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அது தொடர்பாக தேர்தல் ஆணையத்திற்கு பல்வேறு கேள்விகள் எழுப்பியுள்ளார்.**

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

இந்தியா கூட்டணியினர் எழுப்பிய கேள்விகளுக்கு விடையளிப்பதற்குப் பதிலாக, கூடுதலான கேள்விகளை எழுப்பியிருக்கிறது தலைமைத் தேர்தல் ஆணையரது ஊடகச் சந்திப்பு.

பின்வரும் கேள்விகள் எழுகின்றன:

1. வீடுதோறும் கணக்கெடுப்பு நடத்தியும், எப்படி இத்தனை தகுதியான வாக்காளர்கள் நீக்கப்பட்டனர்?




2. புதிய வாக்காளர்களின் பதிவு வழக்கத்திற்கு மாறாகக் குறைவாக உள்ளது. இந்த இளம் வாக்காளர்கள் கணக்கெடுக்கப்பட்டனரா? தகுதிக்குரிய நாளில் 18 வயது நிறைவுற்ற எத்தனை இளம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர் என்பதைச் சொல்லும் தரவுகள் ஏதேனும் இருக்கிறதா?

3. Registration of Electors Rules, 1960இன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள விசாரணை மற்றும் இரண்டு முறையீடு நடைமுறைக்கான காலவரையறை, எதிர்வரும் பீகார் மாநிலத் தேர்தலில் பெருமளவிலான வாக்காளர்களை விலக்கும் வாய்ப்புள்ளது. இவ்விவகாரத்தைத் தேர்தல் ஆணையம் எவ்வாறு தீர்க்கப் போகிறது?

4. பிற மாநிலங்களில் சிறப்புத் தீவிரத் திருத்தம் (SIR) மேற்கொள்ளப்படும்போது, இந்த நடைமுறைச் சிக்கல்களைத் தேர்தல் ஆணையம் கணக்கில் கொள்ளுமா?

5. 01/05/2025 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, மறைந்த வாக்காளர்களின் பெயரை நீக்குமாறு 17/07/2025 அன்று தேர்தல் ஆணையத்திடம் நாங்கள் முறையிட்டோம். இது எப்போது நிறைவேற்றப்படும்?

6. வாக்காளரின் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணமாக ஆதாரை ஏற்கத் தேர்தல் ஆணையத்தைத் தடுப்பது எது?

7. “நியாயமான தேர்தல்கள்” என்பதே தேர்தல் ஆணையத்தின் இலக்காக இருக்குமானால், அது மேலும் வெளிப்படைத்தன்மையுடனும் வாக்காளர்களுக்கு நெருக்கமாகவும் இருக்கலாமே?

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.